விடை--

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சென்னையில் ஐந்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் சென்னை (மேற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. சென்னை (வடக்கு) வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ. 56 இலட்சம் செலவிலும் சென்னை (மையம்) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ. 41 இலட்சம் செலவிலும் சென்னை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ. 36 இலட்சம் செலவிலும் சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. சென்னை (கிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சமீபத்தில்தான் துவக்கப்பட்டது. தக்க தருணத்தில் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

30--

ரிக்ஷாத் தொழிலாளர்களுக்கு ஆட்டோ வழங்கும் திட்டம்

வினா எண் 736--**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சென்னையில் ரிக்ஷா ஓட்டும் தொழிலாளர்களுக்கு ஆட்டோ வாங்கித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உண்டா?

விடை--

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

சென்னையில் ரிக்ஷா ஓட்டும் தொழிலாளர்களுக்கு ஆட்டோ வாங்கித் தரும் திட்டம் ஏதும் தொழிலாளர் துறையின் பரிசீலனையில் இல்லை.

31--

சிங்காரவேலர் இல்லத்தில் படுக்கை வசதிகள்

வினா எண் 741--**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--